**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 46/2022 (Mother case No.SC.No.38/2020) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-1** |
| | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : குமரேசன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 29th day of August 2022.

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக பிடியாணை போட்டு, பிடியாணை நிறைவேற்றப்படாமல் உள்ளது. எதிரியை கைது செய்வதற்கான சாட்சியக்கூறுகள் தற்போது இல்லை என்பதால் கு.வி.மு.ச.பிரிவு **299** ன் கீழ் சாட்சியம் பதிவு செய்வதற்கு **26.08.2022** அன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், சாட்சி முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தாந்தோணி, மலர்கார்டன், சிவசக்தி நகரில் வசித்து வந்து, கரூர் முருகன் பைனான்சில் மேலாளராக பணிபுரிகிறேன். சம்பவ சமயம், ராமச்சந்திரபுரம், எம்.ஆர்.கார்டனில் வசித்து வந்தேன். என்னுடன் பிறந்தவர்கள் இரு அண்ணன்கள். என் மூத்த அண்ணன் பெயர் சரவணன். இரண்டாவது அண்ணன் பெயர் ரெங்கநாதன். இவ்வழக்கில் இறந்துபோன ரெங்கநாதனும், அவரது மனைவியும் எனது அண்ணன் மற்றும் அண்ணி. என் அண்ணன் ரெங்கநாதனுக்கு அக்சதா என்ற 4 வயது குழந்தை உள்ளார். என் அண்ணன் ரெங்கநாதனும், அவரது குடும்பத்தினரும் மணவாடி கிராமம், அய்யம்பாளையத்தில் வசித்து வந்தனர். என் அண்ணனுடன் என் அம்மா

கண்ணம்மாவும் வசித்து வந்தார். 1, 2 எதிரிகள் என் அம்மாவின் தங்கை மகன்கள். 3ம் எதிரி பிரவீனும் என் அம்மாவின் தங்கை மகன். 1வது எதிரி பெயர் பார்த்தீபன் (எ) லோகராஜ். 2வது எதிரி பெயர் கௌதம் (எ) கௌதமன். பூர்வீக இடம் சம்மந்தமாக எதிரிகளுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் இடையே பிரச்சினை இருந்து வந்தது. இவ்வழக்கு சம்பவத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு என் அண்ணன் ரெங்கநாதன் 1, 2 எதிரிகளை அடித்து, பூர்வீக இடத்தில் இருக்கிற வீட்டிலிருந்து அவர்களை காலி செய்யுமாறும், இல்லையென்றால் உயிரோடு இருக்க விடமாட்டேன் என என் அண்ணன் மிரட்டினார். 11.05.2020 அன்று என் அண்ணன் மைத்துனர் தீபன் என்னை பார்ப்பதற்காக என் வீட்டிற்கு வந்தார். அப்போது என் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்பதால் என் அம்மாவை பார்ப்பதற்காக என் அண்ணனின் மைத்துனர் தீபனை கூட்டிக்கொண்டு, என் அண்ணன் வசித்து வந்த மணவாடி கிராமத்திற்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் தீபனுடன் சென்றேன். இரவு 8.00 மணிக்கு என்னுடைய வீட்டிலிருந்து கிளம்பி, 8.30 மணிக்கு என் அண்ணன் ரெங்கநாதன் வீட்டிற்கு சென்றேன். அப்போது 1, 2 எதிரிகள் கையில் ஆளுக்கொரு அருவாளும், 3வது எதிரி அவர் கையில் கத்தியும் வைத்துக்கொண்டு என் அண்ணன் ரெங்கநாதன் வீட்டில் இருந்தனர். என் அண்ணன் ரெங்கநாதன் வீட்டின் போட்டிக்கோவில் நின்றுக்கொண்டிருந்தார். அப்போது 1ம் எதிரி நீ உயிரோடு இருந்தால்தானேடா சொத்துக்கேட்டு பிரச்சினை செய்வாய் என்று சொல்லி 1ம் எதிரி என் அண்ணனை வெட்ட முயற்சித்தார். என் அண்ணன் பயந்துபோய் வீட்டின் வராண்டாவிலிருந்து வீட்டின் சமையலறைக்குள் ஓடினார். அவர் பின்னாடியே, 1 முதல் 3 எதிரிகள் ஓடினர். அவர்களுக்கு பின்னாடியே நானும், என் அண்ணியும், தீபனும் சென்றோம். அப்போது 1ம் எதிரி பார்த்தீபனும், தீபனும் வீட்டின் சமையலறைக்குள் சென்றனர். 3ம் எதிரி பிரவீன் எங்களை கிட்டே விடாமல், கிட்டே வந்தால் கொன்றுவிடுவேன் என மிரட்டினார். 1ம் எதிரி பார்த்தீபன் கையில் வைத்திருந்த அருவாளால், "இத்தோடு செத்துப்போடா" என்று சொல்லி என் அண்ணனை வெட்டினார். என் அண்ணன் ரெங்கநாதன் அவர் கையால் தடுத்தார், அதில் அவரது வலது சுண்டுவிரலும், மோதிரவிரலும் வெட்டுப்பட்டு, தனியாக விழுந்தது. அதன்பிறகு 1, 2 எதிரிகள் அருவாளால் என் அண்ணனை சரமாரியாக வெட்டினார்கள். என் அண்ணன் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார். அப்போதும் ஆத்திரம் தாங்காமல் 1ம் எதிரி பார்த்தீபன் பக்கத்திலிருந்து சிலிண்டரை எடுத்து என்

அண்ணன் முகத்தில் போட்டார். அதில் என் அண்ணன் முகம் சிதைந்துபோனது. நானும், என் அண்ணியும், தீபனும் சத்தம் போட்டோம். பக்கத்திலிருந்து மற்றொரு சிலிண்டரை 2 ம் எதிரி கௌதம் எடுத்து, எங்கள் மீது போடுவதற்கு வந்தார். நாங்கள் பயந்துபோய் நாங்கள் மூவரும் போட்டிக்கோவிற்கு வந்துவிட்டோம். அப்போது என் அண்ணன் மகள் அக்சிதாவை நான் கையில் பிடித்துக்கொண்டிருந்தேன். 2 ம் எதிரி கௌதமன் அந்த சிலிண்டரை என் அண்ணன் மீது போட்டார். பின்னர் 1 முதல் 3 எதிரிகள் வெளியே வந்தனர். 3 ம் எதிரி முதலில் வந்தார். என் அண்ணி, படுபாவி பயலுகளே ஏண்டா இப்படி பண்ணிவிட்டீ,ரகள் என்று சத்தம்போட்டு, பிரவீனை பிடிக்க முயற்சித்தார். பிரவீன் கையில் வைத்திருந்த கத்தியை வைத்து என் அண்ணியை வெட்டினார். என் அண்ணி தடுத்ததில் இரண்டு கையிலும் வெட்டுப்பட்டது. அவரது இடது கட்டை விரல் தனியாக கீழே விழுந்தது. பின்னர், 3 ம் எதிரி அவர் கையில் வைத்திருந்த கத்தியை வைத்து, நீயும் இருந்தால் எனக்கு பிரச்சினைதான்டி என்று சொல்லி என் அண்ணியை சரமாரியாக வெட்டினார். என் அண்ணியின் வலது கழுத்திற்கு அருகில் கத்தியால் குத்தினார். என் அண்ணியும் அதே இடத்தில் கீழே விழுந்துவிட்டார். அதன்பிறகு அவர்கள் மூவரும் எங்களை பார்த்து, உங்கள் குடும்பத்திலிருந்து யாராவது சொத்துக்கேட்டால் உங்களுக்கும் இதே கதிதான் என்று சொல்லி அருவாளை காட்டி மிரட்டிவிட்டு, வீட்டிற்கு பின்னால் சென்று, சீமைக்கருவேல் முள் இடைவெளி வழியாக சென்று, ஸ்பிளண்டர் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். நான் என் அண்ணனையும், அண்ணியையும் தொட்டுப்பார்த்தேன். அவர்கள் இறந்துவிட்டனர். அதன்பிறகு நான் வெள்ளியணை காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்று, புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.1. அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். நீதிமன்றத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் அருவாளை வைத்து 1 ம் எதிரி பார்த்தீபன் வெட்டினார். அந்த அருவாள் சா.பொ.1. நீதிமன்றத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் அருவாளை வைத்து 2 ம் எதிரி கௌதமன் வெட்டினார். அந்த அருவாள் சா.பொ.2. நீதிமன்றத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் கத்தியை வைத்து 3 ம் எதிரி பிரவீன் வெட்டினார். அந்த கத்தி சா.பொ.3. நீதிமன்றத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் இரண்டு சிலிண்டர்களை வைத்து எதிரிகள் என் அண்ணனை தாக்கினார்கள். அந்த சிலிண்டர்கள் சா.பொ.4 மற்றும் 5. எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து சென்ற இருசக்கர வாகனம் நீதிமன்ற அரங்கத்திற்கு வெளியே உள்ளது.

அது சா.பொ.6. இடப்பிரச்சினை சம்மந்தமாக எதிரிகளுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் இடையே பிரச்சினை உள்ளது. அது சம்மந்தமான பத்திரத்தை போலீசாரிடம் நான் ஒப்படைத்தேன். அந்த பத்திரம் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.2. (*அ.சா.ஆ.2* ன் நகல் எதிரிகளுக்கு வழங்கப்படவில்லை என எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்சொன்ன ஆவணத்தின் நகல்கள் ஆஜர் *1, 2* எதிரிகளுக்கு வழங்கப்பட்டு, விசாரணை தொடரப்படுகிறது*)*. அ.சா.ஆ.2 ஆவணம் என் அம்மா கண்ணம்மாள் பெயரில் உள்ள ஆவணம். என் அம்மா தற்போது இறந்துவிட்டார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை இருமுறை விசாரித்தனர். நான் குளித்தலை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் இவ்வழக்கு சம்மந்தமாக கு.வி.மு.ச.பிரிவு 164 ன் கீழ் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.3. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். குற்றவியல் நீதித்துறை நடுவரிடம், என் அண்ணனையும், அண்ணியையும், எதிரிகள் பார்த்தீபன், கௌதமன், பிரவீன் ஆகியோர் கொன்றுவிட்டனர், அதற்கு சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வாக்குமூலம் கொடுத்தேன்.

ஒம்/. R.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 46/2022 (Mother case No.SC.No.38/2020) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-2** |
| | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 29th day of August 2022.

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக பிடியாணை போட்டு, பிடியாணை நிறைவேற்றப்படாமல் உள்ளது. எதிரியை கைது செய்வதற்கான சாட்சியக்கூறுகள் தற்போது இல்லை என்பதால் கு.வி.மு.ச.பிரிவு **299** ன் கீழ் சாட்சியம் பதிவு செய்வதற்கு **26.08.2022** அன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், சாட்சி முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் ஆண்டாங்கோவில், ராஜாநகரில் குடியிருந்து வந்து, எலக்ட்ரீசியனாக வேலை பார்க்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் என் மாமா. என்னுடன் பிறந்தவர்கள் நான்கு மூத்த சகோதரிகள். இவ்வழக்கு சம்பவத்தில் என் இரண்டாவது அக்கா தீபிகாவும், அவரது கணவர் ரெங்கநாதனும் இறந்துபோனார்கள். அவர்கள் மணவாடி, அய்யம்பாளையத்தில் குடியிருந்து வந்தனர். 1, 2 எதிரிகள் என் மாமாவின் சித்தி மகன்கள். மற்றொரு எதிரி பிரவீனை எனக்கு தெரியும். அவரும் என் மாமாவின் சித்தி மகன். என் மாமாவிற்கும், அவருடைய சித்தி மகன்களுக்கும் பூர்வீக இடம் சம்மந்தமாக 15 வருடங்களாக

பிரச்சினை இருந்து வந்தது. சம்பவத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, என் மாமா 1, 2 எதிரிகளிடம் வீட்டை காலிசெய்யுமாறு சண்டை போட்டார். சண்டை போட்டதால், குடும்பத்துடன் கொன்றுவிடுவேன் என எதிரிகள் மிரட்டினார்கள் என என் மாமா என்னிடம் சொன்னார்.

11.05.2020 அன்று இரவு 7.00 மணியளவில் தாந்தோணியில் உள்ள என் சின்னமாமா குமரேசன் என்பவர் வீட்டிற்கு சென்றேன். அப்போது அவர் நான் அம்மா வீட்டிற்கு செல்கிறேன், வருகிறாயா என்று கேட்டார். என் மாமா வீட்டில் அவரது அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரை பார்க்க செல்கிறேன், வருகிறாயா என்று கேட்டார். நாங்கள் இருவரும் அங்கு சென்றோம். நாங்கள் போகும்போது, வீட்டில் லைட் எரிந்துக்கொண்டிருந்தது. வீட்டில் மூன்று பேசிக்ொகண்டிருந்தார்கள். ஒரே சத்தமாக இருந்தது. பக்கத்தில் சென்று யாரென்று பார்த்தபோது, கௌதமன், பார்த்தீபன் கையில் அருவாள் வைத்திருந்தார்கள், பிரவீன் கையில் கத்தி வைத்துக்கொண்டு நின்றார்கள். என் மாமா போட்டிக்கோவில் நின்றுக்கொண்டிருந்தார். என் அக்கா கொஞ்சம் தள்ளி நின்றார். சொத்துப்பிரச்சினை சம்மந்தமாக கெட்டவார்த்தையால் திட்டி சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் பார்த்தீபன் அருவாளை எடுத்து, என் மாமாவை வெட்ட போனார். என் மாமா நின்றுக்கொண்டிருந்தவர், திடீரென கிச்சனுக்குள் சென்றார். பின்னாடியே பார்த்தீபன் துரத்திக்கொண்டு சென்றார். கௌதமன், பிரவீன் ஆகியோர் பின்னாடியே போனார்கள். பிறகு, நான், என் அக்கா, என் மாமா குமரேசன் ஆகிய மூவரும் வீட்டிற்குள் போனோம். பார்த்தீபன் என் மாமாவை வெட்ட போனார். என் மாமா ரெங்கநாதன் அவரது கையை வைத்து தடுத்தார். அப்போது அவரது மோதிர விரலும், சுண்டு விரலும் கட்டாகி விழுந்துவிட்டது. அதன்பிறகு, தலை, தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார். கௌதனும் சேர்ந்துக்கொண்டு வெட்டினார். நாங்கள் தடுப்பதற்காக போனோம். பிரவீன் கிச்சனுக்கு வெளியே நின்றுக்கொண்டு, கத்தியை வைத்துக்கொண்டு, எங்களை உள்ளே விடவில்லை. பின்னர், பக்கத்திலிருந்த சிலிண்டரை எடுத்து பார்த்தீபன் என் மாமா ரெங்கநாதன் முகத்தில் அடித்தார். அப்போது நாங்கள் ரொம்ப சத்தம்போட்டு கத்தினோம். கௌதம் என்பவர் சிலிண்டரை தூக்கி எங்கள் மீது போட வந்தார். அப்போது நான், என் அக்கா, குமரேசன் மாமா ஆகியோர் வெளியே ஓடி வந்தோம். அதன்பிறகு பிரவீன் முதலில் வெளியே வந்தார். அப்போது நான் என் அக்காவை இழுத்துக்கொண்டு வந்தேன்.

அவர் என்னை தடுத்துக்கொண்டு, ஏண்டா பாவிகளா இப்படி செய்தீர்கள் என்று போனார். அப்போது பிரவீன் அவர் வைத்திருந்த கத்தியால் ஓங்கி என் அக்கா தீபிகாவை வெட்டினார். அதில் அவரது கட்டை விரல் துண்டாகி கீழே விழுந்தது. அந்த கத்தி வெட்டு என் அக்கா தலையில் பட்டது. ம-றுபடியும் வெட்டியதில் கையில் காயமானது. நீயும் செத்துப்போ என்று சொல்லி என் அக்காவின் கன்னத்தில் குத்தினார். என் அக்கா கீழே விழுந்துவிட்டார். நான் பயத்தில் போகவில்லை. பின்னர் மூவரும் இனிமேல் சொத்துக்கேட்டு, யாராவது வந்தால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு பின்னால் வழியாக சென்றுவிட்டார்கள். குமரேசன் மாமா, அக்காவிற்கும் மாமாவிற்கும் உயிர் இருக்கிறதா என்று பார்த்தார். அக்காவும், மாமாவும் இறந்துவிட்டார்கள் என்றும், புகார் கொடுக்க வெள்ளியணை காவல்நிலையம் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு, போனார். நான் பாப்பாவையும், அம்மாச்சியையும் வைத்துக்கொண்டு, வெளியிலேயே உட்கார்ந்திருந்தேன். என் அக்கா தீபா என்பவருக்கு போன் செய்து சம்பவம் பற்றி சொன்னேன். பின்னர் என் அப்பாவும், போலீசாரும் வந்தார்கள். சொந்தக்காரர்களும் வந்தார்கள். நீதிமன்றத்திலுள்ள சா.பொ.1 அருவாளை பார்த்தீபன் வைத்திருந்தார். நீதிமன்றத்திலுள்ள சா.பொ.2 அருவாளை கௌதமன் வைத்திருந்தார். நீதிமன்றத்திலுள்ள சா.பொ.3 கத்தியை பிரவீன் வைத்திருந்தார். நீதிமன்றத்திலுள்ள சிலிண்டர்களை என் மாமா மீது பார்த்தீபன் போட்டார். அது எந்த சிலிண்டர் என்று என்னால் குறிப்பிட்டு காட்ட இயலாது. எதிரிகள் என் மாமா வீட்டிற்கு பின் வழியாக சென்றார்கள். அவர்கள் பைக்கில் சென்ற சத்தம் கேட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள். இரண்டுமுறை என்னை விசாரித்தனர். சம்பவத்திற்கு மறுநாள் காலையில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். அதன்பிறகு வெள்ளியணை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தனர். அதன்பிறகு, குளித்தலை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடம் என் அக்காவையும், மாமாவையும் பூர்வீக சொத்து சம்மந்தப்பட்ட பிரச்சினையில் பார்த்தீபன், கௌதமன், பிரவீன் ஆகியோர் வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.4. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும்.

ஒம்/. R.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 46/2022 (Mother case No.SC.No.38/2020) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-3** |
| | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : அக்சதா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 29th day of August 2022.

சிறுமி அக்சிதா வயது 7 என்பவர் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளார். சிறுமி சாட்சியம் அளிப்பதற்கு தகுதியுள்ளவராக உள்ளாரா என்பதை நிர்ணயிப்பதற்கு கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டன.

படிக்கிறாயா ?
படிக்கிறேன்.

2 ம் வகுப்பு படிக்கிறேன்.

பள்ளியின் பெயர் என்ன ?
அரசுப்பள்ளி.

பள்ளி எந்த ஊரில் உள்ளது?

ஆண்டாங்கோவிலில் உள்ளது.

நம் நாட்டின் பெயர் என்ன?

தெரியவில்லை.

கிழமை என்றால் என்ன?

வாரங்கள்.

தேதி என்றால் என்ன என்று தெரியுமா?

தெரியாது.

நீ யாருடன் தங்கியிருக்கிறாய்?

என் அம்மாவுடன் தங்கியிருக்கிறேன்.

வீடு எங்கு உள்ளது?

ஆண்டாங்கோவிலில் உள்ளது.

உன் வகுப்பில் உனக்கு யார் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்?

சார்

அந்த சார் பெயர் தெரியுமா?

சாட்சி தெரியாது என தலையை ஆட்டி பதில் சொல்கிறார்.

அந்த சார் என்ன பாடம் சொல்லிக்கொடுப்பார்?

சாட்சி பதில் அளிக்கத் தெரியாமல் உள்ளார்.

காலையில் என்ன சாப்பிட்டாய்?

முருங்கைக்காய் குழம்பு, வெள்ளை சாதம் சாப்பிட்டேன்.

மாலையில் என்ன சாப்பிட்டாய்?

பிரியாணி சாப்பிட்டேன்.

காலையில் எங்கு சாப்பிட்டாய்?

காலை என் வீட்டில் சாப்பிட்டேன்.

மாலை எங்கு சாப்பிட்டாய்?

கோர்ட்டில் சாப்பிட்டேன்.

இந்த இடம் கோர்ட் என்று எப்படி தெரியும்?

சாட்சிக்கு பதில் அளிக்க தெரியவில்லை.

நீதிமன்றத்தில் உள்ள தட்டச்சரை பார்த்து, அவர் என்ன செய்கிறார் என்று கேட்டதற்கு சாட்சியால் பதில் அளிக்க இயலவில்லை.

உன் அப்பா பெயர் என்ன?

ரெங்கநாதன்

உனக்கு நண்பர்கள் உள்ளனரா?

உள்ளனர். என் நண்பர் பெயர் ஷாரா

ஷாரா என்ன செய்கிறார்?

ஷாரா என் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்.

விளையாட்டு என்றால் தெரியுமா?

தெரியும்.

என்ன விளையாடுவாய்?

கண்ணாமூச்சி விளையாடுவேன்.

யார், யாருடன் விளையாடுவாய்?

என் Friends உடன் விளையாடுவேன்.

உன் Friends யார், யார்?

ஷாரா, கிருஷ்மிகா, வருண், கிருத்திக். வேறு யாரும் இல்லை.

சாட்சி நீதிமன்றம் கேட்கும் கேள்வியை புரிந்து, அதற்கு அறிவார்ந்த பதிலை அளிப்பதற்கு தகுதியுடன் உள்ளார் என்பதை தீர்மானித்து, சாட்சி பிரமாணம் செய்ய முடியுமா என்பதை அறிவதற்கு மேலும் கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்படுகிறது.

பொய், உண்மை என்ன என்று தெரியுமா?

தெரியும்.

பொய் சொன்னால் என்ன செய்வார்கள்?

அடிப்பார்கள்.

எங்கு அடிப்பார்கள்?

கையில் அடிப்பார்கள்.

யார் அடிப்பார்?

எங்கள் டீச்சர் அடிப்பார்.

நீதிமன்றத்தில் பொய் சொன்னால் என்ன ஏற்படும்?

தெரியாது.

சாட்சிக்கு பிரமாணம் செய்தால் என்ன விளைவு ஏற்படும் என தெரியாத நிலையில் உள்ளதால் சாட்சியை பிரமாணம் செய்யப்படாமல் முதல் விசாரணை செய்வதற்கு அனுமதி செய்யப்படுகிறார்.

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக பிடியாணை போட்டு**,** பிடியாணை நிறைவேற்றப்படாமல் உள்ளது**.** எதிரியை கைது செய்வதற்கான சாட்சியக்கூறுகள் தற்போது இல்லை என்பதால் கு**.**வி**.**மு**.**ச**.**பிரிவு **299** ன் கீழ் சாட்சியம் பதிவு செய்வதற்கு **26.08.2022** அன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில்**,** சாட்சி முதல் விசாரணை செய்யப்படுகிறார்**.**

முதல் விசாரணை

என் அம்மா, அப்பா என்ன ஆனார்கள், இப்போது எங்கு இருக்கிறார்கள்?

சாமியிடம் இருக்கிறார்கள்.

உன் அம்மா, அப்பாவிற்கு என்ன ஆனது?

என் அம்மாவை கத்தியை வைத்து குத்தி விட்டார்கள், என் அப்பாவை அறுவாளை வைத்து வெட்டி விட்டார்கள்.

என் அம்மாவை யார் கத்தியால் குத்தினார்கள் என்று தெரியாது.

உன் அப்பாவை அருவாளால் யார் வெட்டினார்கள் என்று உனக்கு தெரியுமா?

தெரியாது. நான் பார்க்கவில்லை.

உன் அம்மா எங்கு இறந்தார்?

என் அம்மாவை வீட்டிற்குள் வைத்து குத்தினார்கள்.

என் அப்பாவை கிச்சனில் வைத்து வெட்டினார்கள்.

நான் அப்போது வீட்டிற்கு வெளியே கட்டிலில் இருந்தேன்.

உன்னுடன் கட்டிலில் யார் இருந்தார்?

என் அம்மா இருந்தார்.

உன் வீட்டிற்கு யார், யார் வந்தார்கள்?

என் வீட்டிற்கு என் சித்தப்பா பார்த்தீபன், கௌதம், பிரவீன் ஆகியோர் வந்தார்கள்.

அப்போது உன் வீட்டில் யார், யார் இருந்தீர்கள்?

நான், என் அப்பா, என் அம்மா, என் ஆயா ஆகியோர் இருந்தோம்.

வேறு யார், யார் இருந்தார்கள்?

என் மாமா தீபன், என் சித்தப்பாவும் இருந்தார்கள்.

சித்தப்பா பெயர் எனக்கு தெரியாது.

உன்னுடன் வேறு யார் உடன் இருந்தார்கள்?

என்னுடன் வேறு யாரும் இல்லை.

ஒம்/. R.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.